**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

## IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 76/2021** |
| **Deposition of witness for** | : | **PW : 11** |
| **Name** | : | **Dr. சையது அப்துல்காதர்** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **18.07.2023**

எதிரிகள் 1 முதல் 3 ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் முதுநிலை மருத்துவ அலுவலராக 7 ஆண்டுகளாகப் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.01.2020 ம் தேதியன்று மாலை 07.00 மணியளவில் நான் அவசர சிகிச்சைப் பிரிவில் பணியில் இருந்த போது, மதுரை மாவட்டம், பேரையூர் தாலுகா, துல்லுக்குட்டிநாயக்கனூர் என்ற ஊரில் வசித்துவரும் திரு.சின்னசாமி என்பவர் மனைவி திருமதி.அங்கம்மாள்., 65 வயது பெண், என்பவரை அவரது மகன் திரு.விநாயகசெல்வம் என்பவர் என்னிடம் அழைத்து வந்தார்கள். அப்போது அங்கம்மாளை 3 தெரிந்த நபர்கள் அங்கம்மாள் வீட்டின் முன்பு 25.01.2020 ம் தேதி மாலை 07.00 மணியளவில் கையால் தாக்கியதாக திரு.விநாயகசெல்வம் என்னிடம் கூறினார். அவரை பரிசோதனை செய்ததில்,

1)அங்கம்மாள் சுயநினைவு இல்லாமல் இருந்தார்.

2) திருமதி.அங்கம்மாளுக்கு வெளியில் தலை பகுதிக்கு CT scan எடுத்து report உடன் என்னிடம் வந்தார்கள். அந்த அறிக்கையில் திருமதி.அங்கம்மாளின் தலையின் வலதுபுறம் இரத்தக்குழாய் செயல் இழந்து வலது மூளை பக்கம் பாதிக்கப்பட்டிருந்தது.

3) அவருக்கு மேலும் தீவிர சிகிச்சை அளிக்க TRIAGE என்ற ward ல் உள்நோயாளியாக அவரை அனுமதிக்க பரிந்துரை செய்தேன்.

ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் 1 முதல் 3 தரப்பில்) :</u>**

போலிசார் மெடிக்கல் மெமோ கொடுத்து சிகிச்சைக்கு வந்திருந்ததால் அது பற்றி விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டு இருப்போம். சிகிச்சைக்கு வந்த திருமதி.அங்கம்மாள் என்பவர் M கல்லுப்பட்டி காவல்நிலைய மெடிக்கல் மெமோ எதுவும் கொண்டுவரவில்லை. காயம்பட்ட நபர் பேச முடியாத நிலையில் இருந்தால், உடன் அழைத்து வருபவரிடம் எப்படி காயம் ஏற்பட்டது என்றும் யாரால் ஏற்படுத்தப்பட்டது என்றும் எந்த ஆயுதத்தால் காயம் ஏற்படுத்தப்பட்டது போன்ற விபரங்களைக் கேட்டு விபத்துப் பதிவேட்டில் பதிவு செய்வோம். திருமதி.அங்கம்மாளுக்கு ஏற்பட்ட காயங்கள் பற்றி அவரை சிகிச்சைக்கு அழைத்து வந்த அவரது மகனிடம் கேட்டு விபத்து பதிவேட்டில் பதிவு செய்தேன். நீண்ட நாட்களாக வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டவர் கீழே விழுந்தால், நான் விபத்துப் பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் உள்ளது. காவல்துறையினர் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள். போலிசார் விசாரணையின் போது, அங்கம்மாளுக்கு வெளியில் Scan எடுக்கப்பட்டு Report பெறப்பட்டது என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அங்கம்மாளுக்கு தலையின் வலதுபுறம் இரத்தக்குழாய் செயல் இழந்து வலது மூளை பக்கம் பாதிக்கப்பட்டிருந்தது

என்ற விபரத்தை போலிசார் விசாரணையின் போது சொல்லியுள்ளேன். இந்த வழக்கில் அங்கம்மாளுக்கு Xray எடுக்கப்பட்டது. Scan Report ம் என்னிடம் தாக்கல் செய்யப்பட்டது. Xray report ஐயும், Scan report ஐயும் போலிசார் விசாரணையின் போது என்னிடம் இருந்து பெற்றார்களா என்றால் நான் கொடுத்தேன். அங்கம்மாளுக்கு Xray வும் ,Scan ம் எடுக்கப்படவில்லை என்றும் எந்த report ம் பெறப்படவில்லை என்றும் நான் காவல்துறையினருக்கு எந்த Xray மற்றும் SCAN report-களை கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. கம்பு, கல் போன்ற ஆயுதங்களால் தாக்கப்பட்டால் வெளிக்காயங்கள் நிச்சயமாக ஏற்பட்டிருக்கும் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் அங்கம்மாளுக்கு வெளிக்காயங்கள் இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அங்கம்மாளை நான் பரிசோதித்தபோது அவருக்கு வெளிக்காயங்கள் இல்லாததால் தான் No external injury என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். Medical Lego வழக்குகளில் காவல்துறையில் இருந்து மருத்துவ நமூனா வராத போது சட்டம் சார்ந்த மருத்துவ வழக்குகளில் மருத்துவமனைக்குள் உள்ள புறக்காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கில் அவ்வாறு தகவல் கொடுத்துள்ளோம். புறக்காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவிப்பதற்கு தனியாக அச்சிடப்பட்ட நமூனா உள்ளது என்றால் சரிதான். அங்கம்மாளுக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து சாதாரண காயமா, கொடுங்காயமா என்று என்னிடம் தனிப்பட்ட முறையில் போலிசார் கேட்கவில்லை என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 76/2021** |
| **Deposition of witness for** | : | **PW : 12** |
| **Name** | : | **Dr.** மோகன்ராஜ் |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **18.07.2023**

எதிரிகள் 1 முதல் 3 ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில், மூளை நரம்பியல் அறுவை சிகிச்சைப்பிரிவில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.01.2020 ம் தேதியன்று காலை நான் பணியில் இருந்த போது, திருமதி. அங்கம்மாள், 65 வயதுடைய பெண்மணி 27.01.2020 ம் தேதி உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு தலைகாய சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையில் இருந்தார். அவருக்கு வலது பக்க மூளைக்குச் செல்லும் முக்கியமான இரத்தக் குழாயில் இரத்த ஓட்டம் தடைபட்டு வலதுபக்க மூளை செயல் இழந்து 28.01.2020 ம் தேதி காலை 11.00 மணியளவில் சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்தார். அவருக்கு இறப்பின் போது சான்றிதழ் வழங்கியுள்ளேன். மேலும் பிரேதத்தை பிணவைப்பறைக்கு தகவல் தெரிவித்து அனுப்பிவைத்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்..

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :**

தடைபட்ட இரத்த ஓட்டத்தினால் மூளை செயல் இழப்பதற்கு முன்பு தடையில்லாமல் இரத்தம் ஓடுவதற்கு பல்வேறு சிகிச்சைகள் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில், சம்பவ தேதி 25.01.2020 என்று மருத்துவமனையில் அங்கம்மாள் அனுமதிக்கப்பட்ட 27.01.2020 ம் தேதியன்று சொல்லப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். 27.01.2020 ம் தேதிக்கு முன்பாக அங்கம்மாளுக்கு சிகிச்சை அளித்திருந்தால் இரத்த ஓட்டத்தடையை நிவர்த்தி செய்திருக்கலாம் என்றால் சரிதான். Death intimation ஐ காவல்துறைக்கு அனுப்புவதற்கு அச்சடிக்கப்பட்ட பாரம் உள்ளது. நான் அங்கம்மாளுக்கு சிகிச்சை எதுவும் அளித்தேனா என்றால் 27.01.2020 ம்தேதி தலைகாய சிகிச்சைப்பிரிவில் அங்கம்மாள் அனுமதிக்கப்பட்டு எனக்கு முன்னால் இருந்த மருத்துவர்கள் அளித்த சிகிச்சையை 28.01.2020 ம் தேதி காலை 09.00 மணிக்கு நான் பணிக்கு வந்த பிறகு தொடர்ந்தேன். அங்கம்மாளுக்கு உசிலம்பட்டி மற்றும் மதுரையில் உள்ள தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்ட பின்பு 27.01.2020 ம் தேதியன்று மாலை 07.15 மணிக்கு அரசு ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை அளிப்பதற்கு கொண்டுவரப்பட்டார். Case sheet ல் இறந்துபோன நபர் திடீரென cardiodic arrest ஏற்பட்டு மரணம் அடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**அரசு தரப்பில் மறுவிசாரணை :**

அங்கம்மாளுக்கு உசிலம்பட்டியில் பாலா மருத்துவமனையில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. அதன் பிறகு மதுரையில்

Dr.நாகராஜன் VN Neuro care centre மருத்துவமனையில் இருந்து பரிந்துரைக்கப்பட்டு அங்கம்மாளுக்கு தலையில் CT Scan எடுக்கப்பட்டுள்ளது.

**<u>மறு குறுக்கு விசாரணை (1 முதல் 3 எதிரிகள் தரப்பில்):</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை